

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 21

## அறிவிப்புகள்
## 2012 - 2013

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

**மானியக் கோரிக்கை எண். 21**

# அறிவிப்புகள் 2012–2013

**எடப்பாடி கே. பழனிசாமி**
நெடுஞ்சாலை மற்றும்
சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்

# பொருளடக்கம்


| வ. எண் | விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) | 1 |
| 2 | மேம்பாலம் / கீழ்பாலங்கள் கட்டுதல் | 2 |
| 3 | கோட்டம், உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகங்கள் கட்டுதல் | 3 |
| 4 | தேசிய நெடுஞ்சாலையாக (NH 532) தரம் உயர்த்துதல் | 5 |
| 5 | நபார்டு வங்கி நிதியுதவி திட்டம் | 6 |
| 6 | கோவை கணபதி (டெக்ஸ்டூல்) அருகில் தேசிய நெடுஞ்சாலையில் கூடுதலாக புதிய இரு வழி மேம்பாலம் | 7 |
| 7 | மைலம் – பாண்டி வெள்ளிமேடுபேட்டை தேசிய நெடுஞ்சாலையில் ரூ. 25 கோடி மதிப்பில் பல்லடுக்கு பாலம் | 8 |
| 8 | கோட்டம் மற்றும் உட்கோட்டம் தோற்றுவித்தல் | 9 |
| 9 | புதிய 50 ஈப்புகள்வழங்குதல் | 10 |
| 10 | புறவழிச்சாலைகள் அமைத்தல் | 11 |
| 11 | சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் | 12 |

## 1. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

பெருகி வரும் வாகனப் போக்குவரத்தால், மாநில சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் அதிக போக்குவரத்து செறிவு ஏற்படுகிறது. அதிக அளவு வாகனப் போக்குவரத்தை கருத்தில் கொண்டு, சாலையின் கொள்ளளவை அதிகரிப்பதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** 2012–13ஆம் ஆண்டில், 350 கி.மீ. இடை வழித்தட மாநில நெடுஞ்சாலைகளையும், 1150 கி.மீ. ஒரு வழித்தட மாவட்ட முக்கிய சாலைகளும் அகலப்படுத்தும் பணி ரூபாய் 740 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 2. மேம்பாலம் / கீழ்பாலங்கள் கட்டுதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** இரயில்வே பணித் திட்டம் 2012 – 2013 ன் கீழ் ரூபாய் 322.37 கோடி மதிப்பில் கடலூர், திருச்சி, இராமநாதபுரம், சேலம், வேலூர், திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 9 இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 3. கோட்டம், உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகங்கள் கட்டுதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** 2012–13ஆம் ஆண்டில், பகுதி–II திட்டத்தின் கீழ் திருப்பூர் மற்றும் மதுரையில் தலா ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் வட்ட அலுவலகமும், தேசிய நெடுஞ்சாலை அலகிற்கு ரூபாய் 75 இலட்சம் மதிப்பில் சேலத்தில் ஒருங்கிணைந்த வட்ட, கோட்ட மற்றும் உட்கோட்ட அலுவலகங்களும், ரூபாய் 90 இலட்சம் மதிப்பில் கடலூர், தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் (தரக்கட்டுப்பாடு) ஆகிய 3 இடங்களில் கோட்ட அலுவலகங்களும், ரூபாய் 303 இலட்சம் மதிப்பில், சேலம், சூலூர், தோவாளை, பொள்ளாச்சி (தரக்கட்டுப்பாடு), தாம்பரம், பள்ளிப்பட்டு, மணப்பாறை, ஆவுடையார் கோயில், வேதாரண்யம், சத்தியமங்கலம், உசிலம்பட்டி, திண்டுக்கல், சிவகாசி, கமுதி, மதுராந்தகம், திண்டுக்கல் (தரக்கட்டுப்பாடு) ஆகிய 16 இடங்களில் உட்கோட்ட

அலுவலகங்களும், ரூபாய் 36 இலட்சம் மதிப்பில் பரங்கிபேட்டை, செம்பனார்கோயில், உத்தமபாளையம், எடப்பாடி ஆகிய 4 இடங்களில் பிரிவு அலுவலகங்களும் மற்றும் ரூபாய் 225 இலட்சம் மதிப்பில் பள்ளிப்பாளையம், இராயக்கோட்டை, அந்தியூர், சங்கராபுரம், திருச்செந்தூர் (கூடுதல்), மதுரை மற்றும் நாகர்கோயில் ஆகிய 7 இடங்களில் பயணியர் மாளிகைகளும் நடப்பாண்டில் கட்டப்படும்.

## 4. தேசிய நெடுஞ்சாலையாக (NH 532) தரம் உயர்த்துதல்

கடலூர்–விருத்தாசலம் வழியாக சேலம் சென்றடையும் **111** கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலையை (SH **10**), தேசிய நெடுஞ்சாலையாக (NH **532**) தரம் உயர்த்தி மைய அரசு பிப்ரவரி **2012**–இல் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. வரும் நிதியாண்டு முதல் இச்சாலை தேசிய நெடுஞ்சாலையாகப் பராமரிக்கப்படும்.

## 5. நபார்டு வங்கி நிதியுதவி திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூபாய் 215 கோடி மதிப்பீட்டில் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை வலுப்படுத்துதல், மேம்பாடு செய்தல், புதுப்பித்தல் ஆகிய பணிகளும் மற்றும் ரூபாய் 235 கோடி மதிப்பீட்டில் பாலப் பணிகளும் நபார்டு வங்கியின் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் மேற்கொள்ளப்படும்.

## 6. கோவை கணபதி (டெக்ஸ்டூல்) அருகில் தேசிய நெடுஞ்சாலையில் கூடுதலாக புதிய இரு வழி மேம்பாலம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** கோவையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக தேசிய நெடுஞ்சாலை (NH 209) கி.மீ. 162/4–163/0 இல் கணபதி (டெக்ஸ்டூல்) அருகில் கூடுதல் இரு வழி மேம்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 7. மைலம் – பாண்டி வெள்ளிமேடுபேட்டை தேசிய நெடுஞ்சாலையில் ரூ. 25 கோடி மதிப்பில் பல்லடுக்கு பாலம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** தேசிய நெடுஞ்சாலை 45–இல் கி.மீ. 133/4 கூட்டேரிபட்டு அருகே மைலம் – பாண்டி மாநில நெடுஞ்சாலையும் (SH 136) மற்றும் வெள்ளிமேடுபேட்டை மைலம் சாலையும் (MD 739) பிரிந்து செல்கின்றன. இச்சாலைச் சந்திப்பில் உள்ள அதிக போக்குவரத்து செறிவினை முன்னிட்டு தேசிய நெடுஞ்சாலையில் பல்லடுக்கு பாலம் ரூபாய் 25 கோடி மதிப்பில் கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 8. கோட்டம் மற்றும் உட்கோட்டம் தோற்றுவித்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** சேலம் வட்டத்தில், அதிக பரப்பளவுள்ள சேலம் கோட்டத்தை, நிர்வாக வசதிகளை மேம்படுத்தும் வகையில் எடப்பாடியில் புதிய கோட்டம் மற்றும் உட்கோட்டம் தோற்றுவிக்கப்படும்.

## 9. புதிய 50 ஈப்புகள்வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** தள ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள பழைய வாகனங்களுக்கு மாற்றாகவும், புதியதாக ஏற்படுத்தப்பட்ட அலுவலகங்களுக்கும் சேர்த்து புதிதாக 50 ஈப்புகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 10. புறவழிச்சாலைகள் அமைத்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** சங்ககிரி சட்டமன்ற தொகுதியில் தாரமங்கலம் பேரூராட்சியின் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு புறவழிச்சாலை அமைக்க திட்ட ஆய்வு பணிக்கும் மற்றும் நில எடுப்புப் பணிகளுக்கான ஆரம்பக் கட்டப் பணிக்காகவும் ரூபாய் 1 கோடி ஒதுக்கப் படவுள்ளது. மேலும், கீழ்கண்ட

- மணச்சநல்லூர்,
- மன்னார்குடி,
- திருவள்ளூர் மற்றும்
- திருத்தணி

நகரங்களுக்கு நடப்பாண்டில் புறவழிச் சாலைக்கான நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

# 11. சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** சென்னை பெருநகர வளர்ச்சியின் போக்குவரத்து தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு, பின்வரும் இடங்களில் புதிய இணைப்புச் சாலைகள், சாலை மேம்பாலங்கள், ஆற்றுப்பாலங்கள் அமைக்க கீழ்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

**புதிய இணைப்புச் சாலைகள்**

- பல்லாவரம் – துரைப்பாக்கம் சாலையினை கிழக்கு கடற்கரை சாலை வரை நீட்டிப்பு செய்யும் வகையில் ஒரு புதிய இணைப்புச் சாலை.
- மறைமலைஅடிகள் பாலம் – இரும்புலியூர் சாலையில் மேடவாக்கம் பகுதியினை இராஜீவ் காந்தி சாலையில் காரப்பாக்கம் பகுதியில் இணைக்கும் விதமாக சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் பின்புறமாக புதிய இணைப்புச் சாலை.

- அம்பத்தூர் பகுதியில் சென்னை புறவழிச் சாலையினையும் சென்னை வெளிவட்டச் சாலையினை கருணாகரச்சேரி அருகில் இணைக்கும் விதமாக புதிய 200 அடி அகல ஆரச்சாலை.

இப்புதிய சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் நிலஎடுப்புப் பணிகள் நடப்பு ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

## சாலை மேம்பாலங்கள் (Grade Separators)

- ☞ கீழ்கட்டளை அருகே மவுண்ட் மேடவாக்கம் சாலை மற்றும் பல்லாவரம் துரைப்பாக்கம் சாலைகளின் சந்திப்பில் ஒரு மேம்பாலம் அமைக்கப்படும்.

- ☞ மேடவாக்கத்தில் மறைமலைஅடிகள் பாலம் – இரும்புலியூர் சாலையுடன் மேடவாக்கம்–சோழிங்கநல்லூர் சாலைச் சந்திப்பு, மேடவாக்கம் – மாம்பாக்கம் சாலைச் சந்திப்பு மற்றும் மவுண்ட்–மேடவாக்கம் சாலைச் சந்திப்புகளை இணைக்கும் வகையில் ஒரு மேம்பாலம் அமைக்கப்படும்.

இச்சாலை மேம்பாலம் பணிகளுக்கான திட்ட அறிக்கை நடப்பாண்டில் இறுதி செய்யப்பட்டு நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## ஆற்றுப் பாலங்கள் (River Bridges)

- ☞ தேசிய நெடுஞ்சாலை 4–இல் நொளம்பூர் சாலைச் சந்திப்பில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் மற்றும்

- ☞ மவுண்ட் பூவிருந்தவல்லி ஆவடி சாலையில் இருந்து பருத்திப்பட்டு செல்லும் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப்பாலம்

ஆகியவற்றிற்கு திட்ட அறிக்கை நடப்பாண்டில் இறுதி செய்யப்பட்டு நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**எடப்பாடி கே. பழனிசாமி**
நெடுஞ்சாலை மற்றும்
சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்